**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No.1085/2022**

**வழக்கு சாட்சி D.W.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கந்தசாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : ஜவ்வாதுபட்டி | வயது | : சுமார் 46 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 17.04.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**<u>வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

வாதி என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கை எனக்காகவும், மற்ற பிரதிவாதிகளுக்காகவும் தான் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். 1-ம் பிரதிவாதி எனது தாயார் என்றால் ? சரிதான். 3-ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் ? சரிதான். 4-ம் பிரதிவாதி எனது மாமியார் என்றால் ? சரிதான். 1-ம் பிரதிவாதியும், வாதியின் தாயாரும் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் ? சரிதான். வாதியின் பாட்டனார் பழனியப்பகவுண்டரும், எனது பாட்டனார் மல்லப்பகவுண்டரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் ? சரிதான். வழக்கு சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 42 செண்ட் என்றால் ? எனக்கு விஸ்தீரணம் தெரியாது. பாகப்பிரிவினை பத்திரத்தின் வழியாக கிடைத்த சொத்துக்கள் ஆகும். சர்வே எண்.841 என்ற புலத்தில் கிணறு, மின்மோட்டார், மின் இணைப்பு உள்ளது என்றால் ? சரிதான். வாதியின் தகப்பனார் ஆறுமுககவுண்டர், எனது தகப்பனார் பழனிச்சாமி கவுண்டர் மற்றும் பங்காளிகள் சேர்ந்து 25.07.1977ம் தேதி சர்வே எண்.841 மற்றும் இதர சர்வே எண்களை

பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் ? சரிதான். என்னிடம் காட்டப்படும் பாகப்பிரிவினை ஆவணம் தான் எனது தகப்பனாரும், ஆறுமுககவுண்டர் மற்றும் பங்காளிகள் அனைவரும் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் ? சரிதான். **25.07.1977 தேதியிட்ட ஒட்டன்சத்திரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.644/1977 என்ற பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.27**. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் தன்மைபடி சி செடியூல் சொத்துக்கள் வாதியின் தகப்பனார் ஆறுமுககவுண்டருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ? தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களும் சேர்ந்து ஒதுக்கப்பட்டுள்ளது. எனது தகப்பனாருக்கு E செடியூலில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் ? சரிதான். சர்வே எண்.841 என்ற புலத்தில் உள்ள கிணறு, மின் இணைப்பு, மின்மோட்டார் ஆகியவைகளில் ஆறுமுககவுண்டருக்கு 5/6 பாகமும், எனது தகப்பனாருக்கு 1/6 பாகமும் ஒதுக்கப்பட்டது என்றால் ? சரிதான். தண்ணீர் முறை பாசனத்தை ஆறுமுககவுண்டர் 5 நாட்களுக்கும், நாங்கள் ஒரு நாளுக்கும் சுழற்சி முறையில் அனுபவித்து வந்தோம் என்றால் ? சரிதான். பின்னிட்டு ஆறுமுககவுண்டருக்கும், அவரது மகன்களுக்கும் இடையே பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் ? சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் தாவா சொத்துக்கள் வாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். வாதியின் தகப்பனார் எவ்வாறு சொத்தினை அனுபவித்து வந்தாரோ அதன்படி வாதியும் தாவா சொத்து, மின்இணைப்பு, மின்மோட்டார் ஆகியவைகளை அனுபவித்து வந்தார் என்றாலும், எனது தகப்பனார் அனுபவித்து வந்ததை போல் நானும் அனுபவித்து வந்தேன் என்றாலும் ? சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை அவ்வாறு தான் அனுபவித்து வந்தோம். தாவா சொத்திற்கு அருகாமையில் எனக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் ? சற்று தள்ளியும் உள்ளது, அருகாமையிலும் உள்ளது. நான் என்ன விவசாயம் செய்து வருகிறேன் என்றால்? மக்காச்சோளம், வெங்காயம், தக்காளி ஆகியவைகளை பயிரிட்டு

விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் 30 தென்னைமரங்கள் உள்ளது என்றால் ? இல்லை. மக்காச்சோளம், வெங்காயம், தக்காளி ஆகியவைகளுக்கு காப்பீடு செய்துள்ளேனா என்றால் ? இல்லை. நான் விவசாயம் செய்வதற்கு முன்பாக அரசிடம் என்ன விவசாயம் செய்யலாம் என்று கருத்துரை பெற்று விவசாயம் செய்து வருகிறேனா என்றால் ? இல்லை. எங்களது ஊரில் யாரும் கருத்துரை பெற்று விவசாயம் செய்யவில்லை என்றால்? ஒருசிலர் கருத்துரை வாங்குகிறார்கள். குறுகிய காலபயிர் என்பதால் நாங்கள் கருத்துரை எதுவும் கேட்கவில்லை. சர்வே எண்.841 என்ற புலத்தில் உள்ள கிணற்றில் இருந்து சுமார் 150 அடி துாரத்தில் எங்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.833ல் நாங்கள் கிணறு வெட்டியுள்ளோம் என்றால் ? சரிதான். நாங்கள் வெட்டிய கிணறு 150 அடி ஆழம் இருக்குமா என்றால் ? 100 அடி ஆழம் இருக்கும். நாங்கள்வெட்டிய கிணறு 2000ம் ஆண்டு வெட்டிய கிணறு என்றால்? கொஞ்சம், கொஞ்சமாக வெட்டி வந்தோம். மேற்படி கிணற்றிற்கு தனிப்பட்ட முறையில் எங்களது பெயரில் மின் இணைப்பு பெற்றுள்ளோம் என்றால் ? சரிதான்.

(தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.04.17 17:59:40 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்